# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: STC – 108/2022

## வழக்கு சாட்சி : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாலைமேதினி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சாலைதனராஜ் | தொழில் | : | வழக்கறிஞர் |
| கிராமம் | : | அன்னவாசல் | சமயம் | : | |
| தாலுக்கா | | இலுப்பூர் | வயது | : | 26 |

(எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on the day 20th day of March 2024.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். ஏற்கனவே எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்து, புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் சான்றாவணம் 1 முதல் 5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது எனது தரப்பில் கூடுதல் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அத்துடன் நான் தாக்கல் செய்யும் பின்வரும் ஆவணத்தை கூடுதல் புகார்தாரர் தரப்பு சாட்சியமாகவும், ஏற்க வேண்டுகிறேன்.

1) என்னுடைய சேமிப்புக்கணக்கு உள்ள வங்கியான SBI வங்கியில் என்னுடைய சேமிப்புக்கணக்கு பண பரிவர்த்தனை செய்யப்பட்டதற்கான இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட என்னுடைய சேமிப்புக்கணக்கின் வரவு மற்றும் பற்றுக்கான கணினி நகல் **(பு.த.சா.ஆ.6/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எ.த.கு.வி</u>**

உங்களுடைய பு.த.சா.ஆ.6 ஆவணத்தில் கடந்த 02.01.2022 ஆம் தேதி ரூ.4,50,000/-ற்கான பணபரிவர்த்தனை ஏற்பட்டதாக குறிப்புகள் இல்லை என்றால் இல்லை. நான் கையில் இருந்து ரொக்கமாக தான் கொடுத்தேன். அதேபோல் ரூ.4,50,000/-ற்கான வங்கி வரைவோலை எதையும் நீங்கள் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். ரொக்கமாக பணமாக தான் கொடுத்தேன்.

கடந்த 2022 ஆம் ஆண்டில் உங்களுடைய வங்கி சேமிப்புக்கணக்கில் 2022 ஆண்டு முழுவதும், ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் எந்த பணபரிவர்த்தனையும், நடந்ததற்கான குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். 2021 ஆம் ஆண்டு என்னுடைய வங்கி கணக்கிலிருந்து பணத்தை எடுத்து என் கையில் வைத்திருந்து, 2022 ஆம் ஆண்டு கொடுத்தேன். 2021 ஆம் ஆண்டு உங்களுடைய வங்கிக்கணக்கிலிருந்து

பணத்தை எடுத்து, கையில் வைத்திருந்து 2022 ஆம் ஆண்டில் தான் எதிரிக்கு நீங்கள் கொடுத்ததாக சொல்லும் தற்போதைய சாட்சியத்தை உங்களுடைய வழக்கிலோ, முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

நீங்கள் உண்மையில் வங்கியிலிருந்து பணத்தை எடுத்து எதிரியிடம் கொடுத்திருந்தால் அதை உங்களுடைய வழக்கிலும், முதல்விசாரணையிலும், சொல்லியிருப்பீர்கள் என்றும், வழக்கிற்காக நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| sd//–சாலை மேதினி<br>PW.1. | //sd//– திரு.S.அன்புதாசன்,B.com., B.L.,<br>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், இலுப்பூர் (மு.கூ.பொ). |